# பல்கலை.யில் 29, 30ம் தேதி கல்வி கண்காட்சி

திருச்சி: பாரதிதாசன் பல்கலைக்கழக தொழில் மற்றும் ஆலோசனை மையம் வரும் 29 மற்றும் 30ம் தேதிகளில் இரண்டு நாட்கள் பல்கலைக் கழகத்தின் காஜாமலை வளாகத்தில் கலை அறிவியல் மற்றும் மானுடவியல் எனும் தலைப்பில் கல்விக் கண்காட்சியை காலை 10 மணி முதல் நடத்த உள்ளது.

மாணவர்கள் தங்களது மேல்நிலைக் கல்வியை (இளநிலை / முதுநிலை / எம்.பில்/முனைவர் பட்டம்) தெரிவு செய்வதற்கு அல்லது தொடர்வதற்கு இக் கண்காட்சி பயனுள்ளதாக இருக்கும். கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் துறைகள் சம்பந்தமான பாடப்பிரிவுகள் பற்றிய விழிப்புணர்வு பெறவும் இக்கண்காட்சி பெரிதும் உதவும். பல்கலைக்கழகத் துறைகள், இணைவு பெற்ற கல்லூரிகள் மற்றும் இதர கல்வி நிறுவனங்கள் இந்த கல்விக் கண்காட்சியில் பங்கேற்று கலை, அறிவியல், மற்றும் மானுடவியல் படிப்புகளைப் பற்றிய விவரங்களை அளிப்பார்கள். மேலும், மாணவர்களுக்கு மேற்படிப்பு மற்றும் வாழ்க்கை தொழில் பாதையை தேர்வு செய்வதற்கு சிறப்பு ஆலோசகர்கள் மூலம் தனிப்பட்ட முறையில் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு ஒருங்கிணைப்பாளர் பிரசன்னாவை cccbdu,ac.in என்ற மின்னஞ்சல் முகவரியிலோ அல்லது 80980-02828 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு பெறலாம்.

இத்தகவலை பல்கலைக்கழக துணைவேந்தர் முத்துக்குமார் தெரிவித்துள்ளார்.